வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். STC 5/2019

வழக்குசாட்சி PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாணிக்கம், உதவி ஆய்வாளர், கொளத்தூர் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு | ஜாதி | |
| கணவர்/தந்தை | வட்டன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 51 |

தேதி 20.07.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது உதவி ஆய்வாளராக, கொளத்தூர் போக்குவரத்து புலனாய்வு பிரிவில் பணிரிந்து வருகிறேன். கடந்த 2013ம் ஆண்டு இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. சாம்ராஜ் அவர்கள் பணி ஓய்வுப் பெற்று விட்டதால் கால விரயம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 16.06.2013 ம் ஆண்டு ஜி.என்.டி போக்குவரத்து காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. சாம்ராஜ் அவர்கள் பணியில் இருந்தபோது 16.06.2013 அன்று ஜிஎன்டி சாலை புழல் சந்திப்பில் சாலை வாகன விபத்து ஏற்பட்டது என்ற தகவல் அறிந்து அரசு

ஸ்டேன்லி மருத்துவமனை சென்று காயமுற்று சிகிச்சையில் இருந்த ராகுமான்கான் என்கிற ஆனந்தன் த/பெ. யூசப் பாய் என்பவர் அளித்த புகாரினைப் பெற்று GNT போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய குற்ற எண். 377/GNT–3/2013 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் புகார்தாரர் ரகுமான்கான் (எ) ஆனந்தன் மற்றும் லட்சுமணன், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தார். அன்றே மாலை 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சவீன், சதீஷ் என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார். மேற்படி பார்வை மகஜரானது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மாதிரி வரைபடமானது அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் காயமுற்ற நபருக்கு முதலுதவி சிகிச்சையளித்த அரசு ஸ்டேன்லி மருத்துவமனை மருத்துவர் கணேஷ் என்பவரை விசாரித்து அவரிடம் இருந்து விபத்து பதிவேட்டைப் பெற்றேன். மேற்படி விபத்து பதிவேடு அ.த.சா.ஆ. 8 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

மேலும் காயமுற்ற நபருக்கு தொடர் சிகிச்சையளித்த அரசு ஸ்டேன்லி மருத்துவமனை மருத்துவர் சுரேஷ்பாபு என்பவரை விசாரித்து காயச்சான்றைப் பெற்றேன். காயச்சான்றானது முறையே அ.த.சா.ஆ. 9 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. இவ்வழக்கில் விபத்தினை ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுநர் சுப்பிரமணி என்பவர் முத்துராமன் என்பவர் மூலம் நிலையம் ஆஜர் ஆகி விசாரணைக்கு பின்னிட்டு 16.06.2013 இரவு 19.30 மணியளவில் கைது செய்து நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். 17.06.2013 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட விபத்திற்குண்டான TN 21 N 0842 என்ற பஸ் , 13.08.2013 அன்று TN 07 AU 6409 என்ற இருச்சக்கர வாகனத்தையும்

வாகன தணிக்கைகாக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 திரு. ஜெய் மனோகர் என்பவரிடம் ஆஜர் படுத்தி வாகன தணிக்கை சான்றுகள் பெற்றார்.

வாகன ஆய்வாளர் ஜெய் மனோகர் என்பரை விசாரித்து வாக்குமுலம் பெற்றார். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து காயச்சான்றின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 338 இதச ஆக மாற்றி சட்டப்பிரிவு மாற்று அறிக்கையை தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.08.2013 அன்று சட்டப்பிரிவுகள் 279, 338 இதச பிரிவுகள்படி எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். நேரடியாக வழக்கினைப் பற்றி தெரியாது என்றால் ஆமாம். சம்பவ இடம் அதிக மக்கள் இருக்கும் நெருக்கமான பகுதி என்றால் ஆமாம். இருச்சக்கர வாகனத்தினை காலதாமதமாக ஆய்விற்கு அனுப்பினோம் என்றால் ஆமாம். சாட்சிகளை சரியாக விசாரணைச் செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காகவும் நடக்காத சம்பவத்தை பொருத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த குற்ற சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**